புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# தென் திருவிதாங்கூர் சாதி அமைப்பும் மறுபக்கம் நாவலில் வெளிபடும் சாதிய கூறுகளும்

த.ஜோஸ்பின் பியூலா
முனைவர் பட்ட ஆய்வாளர்(பகுதிநேரம்)
பதிவு எண் :19123094022024 தமிழாய்வு மையம் முஸ்லிம் கலைக்கல்லூரி,
திருவிதாங்கோடு , கன்னியாகுமரி மாவட்டம்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி

முனைவர்.ஜா.லாலி ஏதேஸ்,
நெறியாளர், உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, முஸ்லிம் கலைக்கல்லூரி,
திருவிதாங்கோடு,

ஆய்வு சுருக்கம்

தென்திருவிதாங்கூர் வரலாறு ஒரு நீண்ட சமூக பொருளாதார பண்பாட்டு பின்புலம் கொண்டது. வருணாசிரம அடுக்குமுறைகளால் இது கட்டுண்டு கிடந்த காலத்தில் எப்படியெல்லாம் சமூக அடுக்குகளில் கீழ் நிலையில் வாழ்ந்த மக்கள் தங்கள் உரிமைகள் மறுக்கப்பட்டு வாழ்வாதாரம் இழந்து எந்த மாதிரியான சிரிமங்களை எதிர்கொண்டார்கள் என்பதை தென் திருவிதாங்கூர் வரலாற்றின் சுவடுகள் வழியும் பொன்னீலனின் நாவல் வழியும் சமூகவியல் ஆய்வின் வழியும் இந்த ஆய்வு வெளிக்கொண்டு வருகிறது.

கலைச்சொற்கள்

சமூகவியல் ஆய்வு, நாவல் இலக்கியம், பொன்னீலனின் மறுபக்கம்

## முன்னுரை

நமது தேசம் காலனியத்தால் கட்டுண்ட தேசமாகும். காலனிய ஆட்சிக்கு முன்னர் மன்னராட்சி இருந்தது. குமரி மாவட்டம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தென் திருவிதாங்கூர் சமஸ்தான எல்லைக்கு உட்பட்டு இருந்தது. இது கேரள மாநிலத்தின் தென்பகுதியும் தமிழ்நாட்டின் தென்கோடி மாவட்டமான கன்னியாகுமரி மாவட்டத்தின் நிலப்பகுதியும் சேர்ந்து திருவிதாங்கூர் என அழைக்கப்படுகிறது. இந்த தென் திருவிதாங்கூர் நிலை எல்லைக்குள் வாழ்ந்த மக்கள் சமுதாய ரீதியாகவும் சாதிய ரீதியாகவும் பொருளாதாரரீதியாகவும் என்ன மாதிரியான மாற்றங்களை எதிர்கொண்டார்கள் என்பதைப் பற்றி தென் திருவிதாங்கூர் சாதிய அமைப்பும் மறுபக்கம் நாவலின் வெளிப்படும், சாதிய கூறுகளும் என்ற இந்த ஆய்வு பேசுகிறது.

## தென் திருவிதாங்கூர் சமுதாயம்

தென் திருவிதாங்கூர் சமுதாயமானது சாதியாலும் மதத்தாலும் துண்டாடப்பட்டு கிடந்தது. இந்துக்கள், இந்துக்கள் அல்லாதவர்கள் என இரு பெரும்பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருந்தது. இந்துக்கள் அல்லாதவர்களில் கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள், சமணர்கள், பௌத்தர்கள் என பெரும் பிரிவுகள் இருந்தனர். இந்துக்கள் சாதியின் அடிப்படையில் மேல் சாதியினராகவும், கீழ் சாதியினர் இந்துக்கள் அல்லாதவர்கள் எனவும் அழைக்கப்பட்டார்கள்.

"பிராமணர், சத்திரியர், அம்பல வாசிகள், நாயர் ஆகியோரே மேல் சாதி பிரிவில் முக்கியமானவர்கள். திருவிதாங்கூரின் தென் பகுதியான நாஞ்சில் நாட்டில் வசித்து வந்த வெள்ளாளர் என்ற ஒரு சிறுபான்மை சமுதாயத்தினரும் மேல் சாதிப்பிரிவில் சேர்க்கப்பட்டருந்தனர். ஈழவர், நாடார், கம்மாளர், மீனவர், பள்ளர், புலையர், பறையர் ஆகியோர்

*கீழ்ச்சாதிப் பிரிவில் முக்கியமானவர்கள். இவர்களைத் தவிர காணிக்காரர், மலைப்பண்டாரம், குறவர், வேடர் போன்ற மலைச்சாதியினரும் அங்கு வாழ்ந்து வந்தனர்" . ( Samuel Mateer , Native of Trivancore, 1991. பக் : 32 )*

*இந்த மேல்சாதிகள் பிரபுகளாகவும், நில உரிமையாளர்களாகவும் இருந்ததால் கீழ் சாதிகளை அடக்கி ஆளும் வல்லமை உடையவர்களாக இருந்தார்கள்.*

*மக்கள் வழி மருமக்கள் வழி*

*மேல் சாதிகளில் ஒரு பிரிவாக இருந்த நாயர் சமுதாய அமைப்பில் குறிப்பிடத்தக்க அம்சம் அவர்கள் கடைப்பிடித்து வந்த வாரிசு உரிமை. மருமக்க தாயம் அல்லது தாய்வழி வாரிசுரிமை முறையை பின்பற்றினார்கள். இந்த முறைப்படி ஒரு ஆடவனின் சகோதரியின் குழந்தைகளே அவனது வாரிசுகளாக கருதப்பட்டனர்.*

*" ஒரு குழந்தையின் தாய் யாரென உறுதியாக தெரிந்த நிலையில் தந்தை யாரென நிச்சயமாக கூற முடியாத நிலை காணப்பட்டதால் மருமக்க தாயமுறை நடைமுறைக்கு வந்ததாக கருதப்படுகிறது ". ( A. Sreedhara Menon, பக் : 165 )*

*இந்த மருமக்க முறையை கடைபிடிப்பதன் மூலம் குடும்ப சொத்து பிரிந்து போகாமல் பாதுகாக்கப்பட்டது.*

*இந்த முறைப்பற்றி கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை மருமக்கள் வழி மான்யம் என்னும் நூலில் மிக தெளிவாக விளக்கியுள்ளார்.*

*கீழ் சாதி பிரிவும் உரிமை மறுப்பும்*

*கீழ்சாதி பிரிவில் மேல்மட்டத்தில் இருந்தவர்கள் ஈழவர்களும் நாடார்களும் ஆவார். ஈழவர்கள் வட திருவிதாங்கூரிலும் நாடார்கள் தென் திருவிதாங்கூரிலும் அதிகமாக காணப்பட்டனர்.*

*"தென் திருவிதாங்கூரின் பெரும்பான்மை இனத்தவரான நாடார்கள் தோவாளை, அகஸ்தீசுவரம், இரணியல், கல்குளம், விளவங்கோடு, நெய்யாற்றின்கரை ஆகிய தென் திருவிதாங்கூர் தாலுகாக்களிலும், செங்கோட்டைத் தாலுகாக்களிலும், ஏல மலைகளிலும் அதிகமாகக் காணப்பட்டனர். ( V. Nagam Aiya, பக் : 398 )*

*சாதிய படிக்கட்டில் நாடார்களுக்கு அடுத்த வரிசையில் தட்டான், தச்சன், கல்தச்சன், கொல்லன் ஆகிய பிரிவுகளை உள்ளடக்கிய கம்மாளர்கள் இருந்தார்கள். இவர்களுக்கு அடுத்த நிலையில் மீனவர்கள் இருந்தார்கள். அவர்கள் மீன்பிடி தொழிலிலும், முத்து குளிக்கின்ற தொழிலிலும் ஈடுபட்டார்கள்.*

*சலுகைகள் மறுக்கப்பட்ட மக்களின் வாழ்வு*

*சலுகைகள் மறுக்கப்பட்ட மக்கள் அடிமட்டத்தில் வாழ்ந்த புலையர்களும் பறையர்களும் ஆவார். வட திருவிதாங்கூரில் புலையர்கள், தென் திருவிதாங்கூரில் பறையர்களும் அதிகமாக காணப்பட்டார்கள். நீண்ட காலமாக உயர் சாதியினருக்கும் அரசுக்கும் நில அடிமைகளாக இருந்த இவர்கள் ஊருக்கு வெளியே குடிசைகள் கட்டி சுகாதாரமற்ற சூழலில் வாழ்ந்தார்கள்.*

*இந்த காலகட்டத்தில் குமரி மாவட்டத்தில் சாதியக் கொடுமை தீவிரமாக இருந்தது. ஒரு நம்பூதிரி பிராமணனுக்கு பக்கத்தில் நாடாளுகின்ற சத்தியர்கள் செல்லலாம், ஆனால் தொடக்கூடாது. மன்னனுக்கு அருகில் சூத்திரர்களான நாயர்கள் செல்லலாம் ஆனால் தொடக்கூடாது. ஒரு நம்பூதிரியிடம் இருந்து நாயர் இரண்டடி தொலைவிலும், புலையர் எழுபத்து இரண்டடி தொலைவிலும், நிற்க வேண்டுமென்று கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு கோயிலில் சென்று இறைவழிபாடு செய்ய மறுக்கப்பட்டது. கோயில் தெருக்களில் நடக்க அனுமதி மறுக்கப்பட்டது. இது அரசு அனுமதியோடு 1850 வரை அனுமதி மறுக்கப்பட்டது. இத்தகைய அடக்கு முறைகள் அப்போதைய திருவிதாங்கூர் சமஸ்தான எல்லை பகுதிகளிலும் அதையொட்டிய பகுதிகளிலும் நடந்தன. இதில் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் பனை தொழில் செய்யும் நாடார்களும் ஈழவர்களும் தான்.*

*கிறிஸ்தவ மிஷனரிகளின் பங்கு*

*கிறிஸ்தவர்களில் சிரியன் கிறிஸ்தவர்கள், கத்தோலிக்க கிறிஸ்தவர்கள், ப்ரோடோஸ்டாண்ட் கிறிஸ்தவர்கள் என 3 முக்கிய பிரிவுகள் இருந்தனர். பதினைந்தாம் நூற்றாண்டில் கோவாவில் இருந்து வந்திறங்கிய கத்தோலிக்க மிஷனரியால் கிறிஸ்தவராக்கப்பட்டவர்கள் கத்தோலிக்க கிறிஸ்தவர் என அழைக்கப்பட்டார்கள். இவர்களில் பெரும்பான்மையினர் மீன் பிடித்தலை தொழிலாகக் கொண்டிருந்தார்கள். தென் திருவிதாங்கூரில் ஏராளமான தாழ்த்தப்பட்டவர்களும் அடிமை சாதியினரும் கிறிஸ்தவத்தை ஏற்று கொண்டார்கள். இனி இஸ்லாமியர்களை பொறுத்தவரை மூன்று முக்கிய பிரிவுகளாக பார்க்கலாம்,. ஒரு பிரிவினர் அரேபியா அல்லது ஆஃப்கானிஸ்தானிலிருந்து குடியேறியவர்கள். இரண்டாவது பிரிவினர் அரேபியர் உள்நாட்டவரோடு திருமண உறவு கொண்டதன் மூலம் பிறந்தவர்கள். மூன்றாவது பிரிவினர் மதமாற்றம் செய்யப்பட்டவர்கள். 1766 முதல் 1790 வரை நடந்த மைசூர் படையெடுப்புகளின் போது ஏராளமானவர் கட்டாயமாக இஸ்லாமிய மதத்திற்கு மாற்றப்பட்டார்கள்.*

*தென் திருவிதாங்கூர் வரலாறும் பொருளாதாரப் பின்னணியும்*

*பண்டைய திருவிதாங்கூர் நிலபிரபுத்துவ முறை அடிப்படையில் அமைந்திருந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் சோழ படையெடுப்பால் ஏற்பட்ட குழப்பம் சமூக பொருளாதார மாற்றங்களை உருவாக்கின. இந்த குழப்பமான சூழ்நிலையை பயன்படுத்தி அன்றைய பொறுப்பிலிருந்த கோயில் தர்மகர்த்தாக்கள், நம்பூதிரிகள் ஆகியோர் கோயில் சொத்தை கையகப்படுத்தினர். உயிருக்கும் உடம்புக்கும் பாதுகாப்பற்ற தன்மை இருந்ததால் சாதாரண குடிமக்களும் தனது சொத்துக்களை நம்பூதிரிகளுக்கு ஒப்படைத்தார்கள். ஆகையினால் நாளடைவில் நம்பூதிரிகள் நில உடமைக்காரர்களாக மாறினார்கள்.*

*மார்த்தாண்டவர்மாவும் அரசியல் மாற்றமும்*

*உள்நாட்டு கலகங்களாலும் அண்டை நாட்டு மன்னர்களின் படையெடுப்புகளாலும் சீர்குலைந்த திருவிதாங்கூருக்கு விடிவுகாலம் பிறந்தது. மன்னர் மார்த்தாண்ட வர்மா உள்நாட்டு கலகங்களை அடக்கி நாட்டின் அமைதியை ஒழுங்குப்படுத்தி அண்டை நாட்டு மன்னர்களை அடக்கி திருவிதாங்கூரை சிறந்த நிலைக்கு மாற்றினார்.*

*உள்நாட்டு குழப்பங்களுக்கு வித்திட்ட அரசியல்*

*உள்நாட்டு குழப்பங்களுக்கு காரணமாக இருந்தவர்கள் திருவிதாங்கூரின் ஆரம்ப கால அரசியல் வரலாற்றில் முக்கிய பங்காற்றிய யோகக்காரர்களும் எட்டு வீட்டுப்பிள்ளைமாருமாவர். யோகக்காரர்கள் என்பவர்கள் எட்டு பேத்தி பிராமண குடும்பங்களின் பிரதிநிதிகளடக்கிய ஒரு குழுவினர். எட்டுப் பேர் கொண்ட இக்குழு திருவனந்தபுரத்திலுள்ள பத்மநாபசுவாமி கோவிலை நிர்வாகம் பண்ணுவதற்காக உருவாக்கப்பட்டது. கோவில் நிர்வாகக் காரியங்களில் முடிவுகள் எடுப்பதற்கு இவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு வாக்கும், மன்னருக்கு அரை வாக்கும் கொடுக்கப்பட்டிருந்தது. நாளடைவில் தேவஸ்தானம் சொத்துக்கள் அனைத்தும் நிர்வகிக்கும் முழு பொறுப்பும் இவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. எனவே கோவில் நிர்வாகம் தொடர்பான காரியங்களில் இக்குழுவினர் சகல அதிகாரமும் உடையவர்களாக மாறினர். தேவஸ்தான நிறுவனங்களுக்கு மன்னர் தீங்கிழைத்தார் எனக்கூறி அவருக்கு அபராதம் விதிக்குமளவிற்கு அதிகாரம் உடையவர்களாக யோகக்காரர் இருந்தனர். மன்னருக்கு கோவில் விழாக்களிலும், சடங்குகளிலும் பார்வையாளராக கலந்து கொள்வதை தவிர வேறெதுவும் செய்ய இயலாத நிலை உருவாயிற்று.*

*எட்டுவீட்டு பிள்ளைமார் என்பவர்கள் மாதனாமடம், ராமனாமடம், குளத்தூர், கழக்கூட்டம், வெங்கானூர், செம்பழந்தி, கொடுமன், பளிச்சல் என்ற எட்டு ஊர்களை சேர்ந்த எட்டு பிரபல நாயர் குடும்பங்களின் பிரதிநிதிகளாவர். இவர்களனைவரும் போத்தி பிரமண ஜென்மிகளின் நிலங்களை பயிரிடும் குத்தகைதாரர்களாக இருந்தனர். தேவஸ்தானம் நிலங்களின் வருவாய் வசூலிக்கும் பொறுப்பும் இவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. நாளடைவில் இவர்கள் கைகளில் செல்வமும் அதிகாரமும் குவியவே யோகக்காரர்களோடு சேர்ந்து தங்கள் ஜென்மிகளையும், மன்னரையும் எதிர்க்க ஆரம்பித்தனர். மாடம்பிமார் என்று*

அழைக்கப்பட்ட நாயர் நில பிரபுக்களையும் தங்களுடன் சேர்த்துக்கொண்டு மன்னருக்கு எதிராக ஒரு சக்தி வாய்ந்த அணியாகச் செயல்பட ஆரம்பித்தனர். மன்னர்கள் திறமையற்றவர்களாக இருக்கும் போதோ அல்லது விழிப்புடன் செயல்படாமல் இருக்கும்போதோ இந்த மூன்று குழுவினரும் சேர்ந்து கலகங்களையும், குழப்பங்களையும் விளைவித்து நாட்டின் அமைதிக்கு பங்கம் ஏற்படுத்தினார். மிகவும் சாதுவாக மன்னராக இருந்த வர்மாவுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் பல தொல்லைகள் கொடுத்து வந்த இவர்கள் இறுதியில் மன்னருக்கு விஷம் கலந்த உணவை கொடுத்து சாகடித்தனர். இவர்களுடைய கொடூர செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைத்தவர் மன்னர் மார்த்தாண்டவர்மா ஆவார்.

சமூக, சமய, பொருளாதார கட்டுப்பாடு

சமூக கட்டுப்பாடுகளை பொறுத்தவரை நாம் ஏற்கனவே குறிப்பிட்டது போல தொட்டால், பார்த்தால், நடந்தால் தீட்டு என்ற வகையில் நாடார் மக்களும் கீழ் சாதி மக்களும் ஒதுக்கப்பட்டார்கள். ஆண்களும் பெண்களும் கால் முட்டுக்கு கீழும் இடைக்கு மேலும் ஆடை அணிய அனுமதிக்கப்படவில்லை. அதுபோல கீழ் சாதி பெண்கள் மார்பை மறைத்து ஆடை அணிந்து சென்றால் அது உயர்சாதிகளை அவமதிக்கும் செயல் என்று கருதினார்கள். இந்த கட்டுப்பாட்டை மீறியவர்களை அடித்து துன்புறுத்தினார்கள். விலை உயர்ந்த ஆடைகள் அணிய, குடை பிடிக்க, காலணி அணிய அனுமதி இல்லை. ஓடு போட்ட வீடுகளில் வசிப்பதும், பால் கொடுக்கும் பசுவை வளர்ப்பதும், வாகனங்கள் உபயோகிப்பதும் தடை செய்யப்பட்டிருந்தது. திருமணம் போன்ற விழாக்களில் பயன்படுத்தும் பந்தல்களை அலங்கரிக்கவும் தடை செய்யப்பட்டிருந்தது. பெண்கள் தண்ணீர் குடத்தை இடையில் சுமந்து கொள்ள அனுமதிக்கப்படவில்லை. குடத்தை தலையில் வைத்து இரு கைகளாலும் பிடித்து செல்லவே அனுமதிக்கப்பட்டனர்.

பெருந்தெய்வ வழிபாடும், சிறு தெய்வ வழிபாடும்

இறைவழிபாடு செய்வதிலும் பல விதமான கட்டுப்பாடுகள் நாடார் இனத்தவருக்கு விதிக்கப்பட்டன. அரசும் உயர் அதிகாரிகளும் உயர்சாதியினரும் வழிபடுகின்ற கோயிலில் நுழையவே வழிபாடு நடத்தவோ வெளி பிரகாரங்களில் செல்லவோ அனுமதிக்கப்படவில்லை. சிவன், விஷ்ணு, பிரம்மா போன்ற தெய்வங்களை வழிப்பட தடை விதிக்கப்பட்டிருந்தது. வீரபத்ரன், மாடன், சுடலை, மாடசுவாமி, இருளன், முத்தாரம்மன், பத்ரகாளி போன்ற தெய்வங்களை இவர்கள் வழிபட்டனர். உயர்சாதியினர் காணிக்கையாக கொடுக்கும் நெய், பால் போன்ற பொருட்களை இவர்களுக்கு கொடுக்க அனுமதி இல்லாததால் கள், சாராயம் போன்ற பொருட்களை இவர்கள் காணிக்கையாக கொடுத்தனர்.

வரி கொடுமையும், பொருளாதார சுரண்டலும்

நாடார் இன மக்களின் வருமானத்தில் ஒரு பெரும் பகுதியை வரிகள் என்ற பெயரில் அரசு எடுத்துக்கொண்டது. அவர்களுக்கு நூற்றுக்கும் மேலான வரிகள் வசூலிக்கப்பட்டன. வசூலிக்கப்பட்ட வரிகளில் முக்கியமான ஒன்று புருசந்தாரம் ஆகும். இது பரம்பரை சொத்துக்கு உரிமையுடைய வாரிசுகளிடமிருந்து வசூலிக்கப்பட்ட வரியாகும். இதன்படி சொத்து மதிப்பில் நாற்பது விழுக்காட்டிற்கும் அதிகமான தொகையை அரசுக்கு சரியாக செலுத்த வேண்டும்.

இதுபோல அவர்களை அதிகமான பாதிப்பிற்கு உள்ளாக்கிய வரி, தலைவரியாகும். 16 முதல் 60 வயது வரையிலான ஆண்கள் அனைவரிடமிருந்தும் இந்த வரி வசூலிக்கப்பட்டது. இறந்தவர்களுக்கு கூட இந்த வரியை அவர்களது உறவினர்கள் கொடுக்க வேண்டி இருந்தது. இந்த வரியை செலுத்த முடியாத காரணத்தால் பல குடும்பங்கள் அண்டை மாநிலத்திற்கு குடிபெயர்ந்தனர். இவ்வாறு குடிபெயர்ந்தவர்களின் உறவினர்களிடமிருந்து இந்த வரியை வசூலிப்பதில் அரசு தீவிரமாக இருந்தது. தலை வரியை தவிர தொழில் வரி, வீட்டு வரி, சொத்து வரி என்று பலவிதமான வரிகளும் வசூலிக்கப்பட்டன. பனை ஏறுவதற்கு பயன்படுத்திய ஏணிக்கு ஏணிக்காணம் என்ற வரியும், தளைக்கு தலைக்காணம் என்ற வரியும் வசூலிக்கப்பட்டன. அதுபோல கள் தயாரிப்பாளர்களிடமிருந்து ஒரு குடம் கள்ளிற்கு ஒரு நாழி கள் வீதம் வரி வசூலிக்கப்பட்டது. ஒரு குடிசைக்கு ஒரு பணம் வீதம், குப்பக்கச்சா என்னும் வீட்டு வரியும் வசூலிக்கப்பட்டது. வீட்டுக்கூரை மாற்றும்போது வரி வசூலிக்கப்பட்டது.பனை, தென்னை,

*கமுகு, மா, பலா, புளி, புன்னை, இழுப்பை, போன்ற மரங்களுக்கு வரி கொடுக்கவேண்டும். திருமணமான பெண்களுக்கு தாலி வரி வசூலிக்கப்பட்டது . இப்படி ஒவ்வொன்றுக்கும் வரி வசூலிக்கப்பட்டது. அரசுக்கு சேரவேண்டிய பணத்தைவிட அதிகாரிகள் அதிகமாக வரி வசூலித்ததால் அதிகாரிகளின் வீடுகளுக்கு சென்று லஞ்சம் கொடுக்க வேண்டி இருந்தது.*

*தண்டனைகள்*

*முதுகில் பாரமான கற்களை ஏற்றி வைத்து வெயிலில் பலமணிநேரம் நிற்க வைத்தல். பழுக்க காய்ச்சிய இரும்புக் கம்பியை காதில் நுழைத்து தொங்க விடுதல். சிறையில் அழைத்து சித்ரவதை செய்தல் போன்ற கொடுமைகளுக்கு அவர்கள் ஆளாக்கப்பட்டனர். வரிகுடுக்க தவறிய வீட்டில் உள்ள பெண்களையும் அதிகாரிகள் துன்புறுத்தினர். உப்பளங்களிருந்து, மண்டிகளுக்கும் விற்பனை நிலையங்களுக்கும் உப்பு மூடை சுமத்தல், அரசு பண்டகசாலையை பாதுகாத்தல், காடுகளிலிருந்து வெட்டிக் கொண்டு வரப்பட்ட மரத்தடிகளை காவல்காத்தல், யானைகளை பிடிக்கும் குழிகள் வெட்டிப்போடப்பட்ட காடுகளை பாதுகாத்தல் இது போன்ற வேலைகளை ஊதியமின்றி செய்ய கட்டாயப்படுத்தப்பட்டனர்.*

*நிலங்களுக்கு வேலியமைத்தல், வண்டிகளில் சுமைகளை ஏற்றி இறக்குதல், மகாராஜாவின் குதிரைகளுக்கு புல் வெட்டிக் கொண்டுக் கொடுத்தல், அரசு கட்டிடங்களை பழுதுபார்த்தல், காவல் காத்தல் போன்ற வேலைகளை விருக்காரர்கள் ஊதியம் பெறாமல் செய்து கொடுக்க வேண்டும். விருத்திக்காரர்கள்செய்யும் வேலைக்கு அரசு பணம் கொடுக்க முன்வந்தாலும் அதிகாரிகள் கூலிக் கொடுக்க மறுத்தார்கள்.*

*அதுபோல சர்க்காருக்கு குற்றிழுப்பு, உப்பெடுப்பு, நெல், அரிசி, ஓலை சுமப்பு, உடைப்புகள் அடைத்தல், பாதை செப்பனிடுதல், ஆறு, குளம் வெட்டுதல் முதலிய பல வேலைகளுக்கும் சர்க்காரிடமிருந்து தயாரிப்பின் படி உள்ள கூலி கொடுக்கிறதாயிருந்தாலும் வேலைகளை நடத்துகிறவர்கள் கூலி கொடாமலிருக்கிறதுமன்றி, பல சாதியிலும் கூலி வேலை செய்கிறவர்களுடனிருந்தாலும், சான்றார் ( நாடார் ) என்று சொல்லப்படுகிற ஒரே சாதியரைக் கொண்டு மாத்திரம் செய்விக்கிறார்கள்.*

*சாதியும், மறுபக்கம் நாவலும்*

*மறுபக்கம் நாவலில் பொன்னீலன் தென்திருவிதாங்கூர் வரலாற்றின் பின்புலத்திருந்து மிக கூர்மையான பார்வையோடு சாதி பற்றிய பதிவுகளை முன்வைக்கிறார். " இந்திய சமூகங்களில் அடிப்படையான அடையாளம் சாதி. காலத்தாலும் சூழலாலும் தொழில் மாறுதலாலும் கூட மாற்ற முடியாத நிரந்தர அடையாளமாக அது இன்று வரை இருந்து வருகிறது " ( மறுபக்கம் - பக் (128) )*

*தென்திருவிதாங்கூரில் அடிமட்ட சாதிகளை வெளியே கொண்டு வரப்போராடிய முதல் வரலாற்றாசிரியர்கள் வெளிநாட்டு சமய தொண்டர்களே ஆவார். ஆதியிலே பறையர்கள் உயர் நிலையில் இருந்தார்கள் என்ற ஆய்வாளர் நாகமய்யாவின் கூற்று சாதி இருந்துள்ளது என்பதை காட்டுகின்றது. " சாணப் பயலெல்லாம் பனை ஏற்றை விட்டுவிட்டு சர்க்கார் சோலிக்கு வந்துவிட்டான் ". - மறுபக்கம் - பக் (319). என்று மேல் சாதியினர் கீழ்சாதியினரை அவமானம் படுத்தும் பழக்கம் இருந்துள்ளது நமக்கு தெரியவருகிறது.*

*தென்திருவிதாங்கூர் வரலாற்றில் மீட்அய்யர்*

*மறுபக்கம் நாவலில் பொன்னீலன் மீட்அய்யர் பற்றிய பதிவுகளை பல இடங்களில் வெளிப்படுத்தியுள்ளார். மீட்அய்யர் தகப்பனையும் தாயையும் இழந்த அனாதை பெண் குழந்தையை நெஞ்சில் அணைத்த படி சுமந்துக்கொண்டு வந்து விடுதியில் தங்கவைத்தார். ஆனால் மறுநாள் எல்லாக் குழந்தைகளும் இரவோடு இரவாக ஓடிப்போய்விட்டார்கள். அவர்கள் ஓடிய காரணம் குறித்து விசாரித்தபோது " நீங்கள் அடிமைக் குழந்தையை விடுதியில் சேர்த்ததைச் சகிக்க முடியாமல் பிற எல்லாக் குழந்தைகளும் ஓடிவிட்டார்கள் " (மறுபக்கம் - பக் - (153)) என்றார். அப்போதுதான் சாதியினுடைய தாக்கத்தை மீட்அய்யர் உணர்ந்துகொண்டார். பள்ளிக்கூடத்தில் புலையர் சாதி ஆசிரியர்களையும், பள்ளிக்கூடத்தில் சேர்ந்த புலையர் மாணவர்களையும் நேரடியாக சந்தித்து வாழ்த்தினார் மீட்அய்யர். கல்வியின் மூலம் மனிதனின் கண்களை திறந்தால் சாதியை ஒழிக்க முடியும் என்று நம்பினார். அதனால் புலையர் ஆண்*

குழந்தைகளை பள்ளியில் சேர்க்கும் ஆசிரியர்களுக்கு ஒரு குழந்தைக்கு மாதம் ஒரு பண வீதம் சம்பள உயர்வும், பெண் குழந்தைகளை சேர்க்கும் ஆசிரியர்களுக்கு ஒரு குழந்தைக்கு மாதம் ஒன்றரை பணம் வீதம் சம்பள உயர்வும் கொடுத்து அதிகளவில் புலையர் மாணவர்களை சேர்க்க ஊக்கப்படுத்தினார், இவ்வாறு ஒருவகையில் மீட்அய்யர் மாணவர்களின் சாதிப்பிரிவினையை ஒழிக்க முயற்சித்தார்.

அதுபோல நெய்யூர் லண்டன் மிஷன் மருத்துவமனையில் பிரசவத்திற்காக வந்த பெண்களை வரிசையாக போடப்பட்ட கட்டில்களில் படுக்க வைத்தார். முதல் கட்டிலில் பிராமணப்பெண், அடுத்த கட்டிலில் பறையர், சூத்திரர் என பலர் இவர் அமர்த்தினார் . ஒருவருக்கொருவர் பேசவும் உதவி செய்யவும் கற்றுக்கொண்டனர். ஒடுக்கப்பட்ட மக்களான சாணார், அரையர், ஈழவர், பள்ளர், பறையர், புலையர் ஆகியோர் உயர் சாதியினரோடு வழிபடும் ஒரே இடம் மண்டைக்காட்டு பகவதி அம்மன் கோவில் ஆகும்.

கீழ்ச்சாதியில் பிறந்த மனிதனை உயர் சாதியினர் பார்த்து விட்டால் தீட்டு பட்டுவிடும் அதனால் கீழ்ச்சாதி மனிதன் (வனசாதியை சேர்ந்த காட்டு மனிதன் ) ஓஹோ....ஓஹோ.... என்று கூவிக் கொண்டே செல்ல வேண்டும். இந்த சத்தத்தை கேட்டு உயர் சாதியை சேர்ந்தவன் கை தட்டி தான் வருவதை அறிவிக்க வேண்டும். அப்பொழுது அவன் போய் ஒளித்து கொள்வான் . " உயர் சாதியினரின் கண்ணில் பட்டால் அவர்கள் தன்னிடம் இருக்கும் வானால் அவனை வெட்டி கொன்றுவிடுவார்கள் ". - மறுபக்கம் - ( பக் - 167 )

எஜமானின் நிலத்தில் வேலை செய்யும் புலையர் சாதி மக்களுக்கு தோண்டிப்போட்ட குழியில் வாழையிலையில் எஜமானியம்மா கஞ்சி ஊத்துவார். எஜமானி அம்மாவுக்கு அறுபத்து நாலு அடி விலகி நிற்காவிட்டால் சவுக்கடி விழும். கைகளை நெஞ்சில் கட்டிக்கொண்டு நிற்க வேண்டும். எஜமானியம்மா சென்றபின்னர் கஞ்சியை முழங்காலையும் முழங்கையையும் ஊன்றி மாடு போல் வாயால் உறிஞ்சி குடிக்க வேண்டும். அதற்குள் அண்டைகாக்கைகள் பருக்கைககளை பொறுக்கிச் சென்றுவிடும்.

மீட்அய்யரின் கலகத் திருமணம்

மீட்அய்யர் உள்ளூரைச் சார்ந்த தாழ்ந்த சாதிப் பெண்ணைத் திருமணம் செய்ததை கிறிஸ்தவர்களானவர்களும் ஏற்றுக் கொள்ளவில்லை. பறச்சி இனத்தை சார்ந்தவள் என்பதற்காகவே வெறுத்தனர் " இந்தக் கல்யாணத்த நீங்க எதுக்கிறதுக்கு ஒரே காரணம் சாதிப் பிரச்சனை. கிறிஸ்தவனான பிறகும் உங்க நெஞ்சில் உறிஞ்சிக் கிடக்கக்கூடிய சாதி அழுக்கு போகல்ல ". இந்த அழுக்குக்கு எதிராகத்தான் மீட்அய்யர் வாழ்நாள் முழுவதும் பாடுபட்டார்.

தென்திருவிதாங்கூரில் தாழ்ந்த சாதிகள் பற்றிய குறிப்பு

மருத்துவர் சாதியைச் சேர்ந்தவர் சிறு தொண்டர். மருத்துவர் என்றால் நாவிதர். ஆடுமாடுகளுடன் வசதியாக வாழ்ந்தவர்கள் மருத்துவ சாதியினர்.

தெய்வலோகத்திலிருந்து நெல்லைப் பூலோகத்திற்கு கொண்டு வந்தவர் பள்ளர் சாதியினர். சிவனும் பார்வதியும் ஆதிபள்ளரும் பள்ளத்தியுமாவார். ஆதி உழவர் சாதியே அவர்கள்தான்.

அருந்ததியர் வம்சத்தினர் மிகவும் ஒடுக்கப்பட்டச் சூழலில் வாழ்ந்தனர். யாரைக் கண்டாலும் ஒதுங்கி ஓட வேண்டும். எதைக் கண்டாலும் விலகிப் பதுங்க வேண்டும். வாயைத்திறந்து ஒரு வார்த்தை பேசினாலும் முதுகில் அடி விழும். ஆசிட் ஊத்தி கக்கூஸ் கழுவும் இவர்கள் தண்ணீர் கேட்டால், " கை மெண்டை பிடிடா ஊத்துறேன் " (மறுபக்கம் 147) என்று கையில் தண்ணீர் ஊற்றிக் கொடுப்பார். சாம்பவர் குடியில் பிறந்த கருப்பர் மகன் சாந்தன், பனைவிளை சாமிக்கண்ணு மகன் சின்ன நீலன் என அனைவரையும் அணைத்துக் கொள்ளும் பண்புடையவர் அய்யா. " மக்கா கலியன் செய்த சதியால் மனுஷர் கூட்டம் மேல் கீழாகச் சாதி ரூபமா உடைஞ்சி. சிதைஞ்சி அழிஞ்சிக்கிட்டிருக்கு. அந்தக் கலியை ஒழிக்க வாளால் முடியாது. கலியன் வெளியே இல்ல உள்ளே இங்கே இருக்கான் " (மறுபக்கம் 430) என்பதிருந்து சாதிவேறுபாடு இருந்ததையும் அது அழிக்கப்பட வேண்டிய ஒன்று என்பதையும் அறியமுடிகிறது.

"சாதி எனும் பாம்பு /
சண்டித் தனம் பண்ணுதடா /
மக்களை இனம் பிரிச்சி /

மாறாட்டம் செய்யுதடா /
சாதியாம் பாம்பச் /
சகியாதே என் மகனே /
ஒருத்தி பெத்த மக்கா /
ஒண்ணாக வாழ்ந்திடுங்கோ ".

வண்ணான் என்பவன் பத்திரகாளியம்மையின் மூத்த மகன் தறிகாரன் நெய்து தரும் துணிகளை வெளுத்து வண்ணம்தீட்டி நமக்கு உடுக்கத் தரக்கூடிய சித்திரிக்காரன். மாத்து தந்து நம் மானங்காப்பவன் அவனை அவமானப்படுத்தக்கூடாது என்பது அய்யாவின் அறிவுரை.

அது போல சாணார் எனப்படக்கூடிய ஜனங்கள் எங்களை நாடார் என்று சொல்வதற்கு அனுமதி தர வேண்டும் என்று ராஜாவிடம் முறையிட்டனர் அவரும் அனுமதி கொடுத்தார். இதனை அறிந்த நாடார்மார் அந்த சட்டத்தை பின்வகிக்க வேண்டுமென்று மனு கொடுத்தனர். இதனை அறிந்த சாணார்கள் எதிர் மனு கொடுத்தனர். இதனை பற்றி மறுபக்கம் நாவலில் பொன்னீலன் சாதியத்துடைய உட்பிரிவினை பற்றி தனது மறுபக்கம் நாவலில் பதிவு செய்துள்ளார்.

" நாடார் என்கிறவங்க பனை தொழில் செய்யிறவங்க அவங்க வீடுகளில் முருக்குத்தடி, அரிவாள் வெட்டி, பதநீர்க்குடுவை எல்லாம் இருக்கும். அகஸ்தீஸ்வரத்துக்காரர்கள் நாடார்மாரே இல்ல. அவங்க வீடுகளில் பனைத்தொழில் சம்பந்தமான எந்த கருவியும் இருக்காது. வீணை, தம்பூரா, மிருதங்கம் இதுக தான் இருக்கும். அவங்க உலச்சர்மாரு. கம்பர் வம்சம். ஒரு கமிசன் போட்டு விசாரிக்கணும் என்னங்களாம் " ( மறுபக்கம் - பக் 490 )

முடிவுரை

இவ்வாது வர்ணத்தில் அடிப்படையிலான சாதியத்தின் தாக்கம் தென் திருவிதாங்கூர் சமூக வரலாற்றின் பின்புலத்தின் வழி மறுபக்கம் நாவலில் வெளிப்படும் விதத்தை இந்த ஆய்வின் மூலம் நாம் கவனிக்கலாம்.

பயன்பட்ட நூல்கள்

1. மறைக்கப்பட்ட வரலாறு, ஜாய்ஞானதாசன்.
2. மலையாளி ஆதிக்கமும் தமிழர் விடுதலையும், டாக்டர் ஜ.லி. பீட்டர், டாக்டர் டி. பீட்டர்.
3. Progress of Travancore, under H. H. Sreemoolam Tirunal, ULLOOR. S. Parameswara Aiyer.
4. நேசமணி ஒரு சரித்திர திருப்பம், ரசாக்.

********* ********* ********** ********* ********* ********** ********** **********